06.12.2017

# தமிழகத்தில் கன மழைக்கு வாய்ப்பு உண்டா? வானிலை ஆய்வு மையம் விளக்கம்



**சென்னை:** தமிழகத்தில் கன மழைக்கு வாய்ப்பு உண்டா என்பது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் விளக்கம் அளித்துள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் பாலச்சந்திரன் இன்று மதியம் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது,நேற்று தென்கிழக்கு வங்கக் கடல் பகுதியில் நிலை கொண்டிருந்த வலுவான காற்றழுத்தத் தாழ்வு பகுதி இன்று அதே இடத்தில் தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளது.

டிசம்பர் 8ம் தேதி வரை அதாவது 3 நாட்களில் இது வடமேற்கு திசையில் நகர்ந்து ஆந்திரக் கரையை நோக்கி நகரும்.

எனவே, டிசம்பர் 6ம் தேதி முதல் 8ம் தேதி வரை 3 நாட்களுக்கு வட தமிழகம் மற்றும் தெற்கு ஆந்திரா கடற் பகுதி மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகின்றனர்.

அடுத்து வரும் 2 நாட்களில் அதாவது 6 மற்றும் 7ம் தேதிகளில் தமிழகம் மற்றும் புதுவையில் ஓரிரு இடங்களில் லோசானது முதல் மிதமான மழை பெய்யும். சென்னையைப் பொறுத்தவரை ஒரு சில பகுதிகளில் லேசான மழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் காற்றழுத்தத் தாழ்வு மண்டலத்தால் தமிழகத்தில் கன மழைக்கு வாய்ப்பில்லை என்பது தெரிய வந்துள்ளது.